## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியின் சீரிய நடவடிக்கையால்

# இந்திய அளவில் கரும்பு உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாம் இடம்!

## சட்டப்பேரவையில் – சர்க்கரைத் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

**சென்னை, ஏப். 4 - சட்டப்பேரவையில் சர்க்கரை மானிய பதிலுரை அளிக்கையில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சீரிய நடவடிக்கையால் கரும்பு உற்பத்தியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு இரண்டாம் இடம் பிடித்திருக்கிறது என்று குறிப்பிட்டதுடன் 15 புதிய அறிவிப்புகளையும் அறிவித்தார்.**

சட்டப்பேரவையில் சர்க்கரைத் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் இரா. இராஜேந்திரன் பதிலுரை வருமாறு:-

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 2 பொதுத் துறை ஆலைகள் மற்றும் 22 தனியார் சர்க்கரை ஆலைகள் என ஆக மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றில், 2024-2025 அரவைப் பருவத்தில், 12 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் மற்றும் 16 தனியார் சர்க்கரை ஆலைகள் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

கடந்த 2021 ஆம் ஆண்டு வரை பல்வேறு காரணங்களால் கரும்பு சாகுபடி பரப்பு குறைந்து, அரவைக்குப் போதுமான கரும்பு கிடைக்காமல் சர்க்கரை ஆலைகள் நலிவடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டன. முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் அகில இந்திய அளவில் கரும்பு உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தை வகிக்கிறது.

**கரும்பு விவசாயிகளின் நலன்!**

முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் அவர்களின் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றவுடன், கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு கடந்த நான்கு ஆண்டுகளாக சிறப்பு ஊக்கத் தொகை வழங்கியது. கரும்பு கிரயத் தொகையை உரிய காலத்தில் வழங்க வழிவகைகள் கடனும் வழங்கியது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மற்றும் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களின்கீழ், மானியத்தில் கரும்பு மேம்பாட்டுத் திட்டங்கள். கரும்பு அறுவடை இயந்திரங்கள் உள்ளிட்ட வற்றை செயல்படுத்தி வருவதன் காரணமாக, சர்க்கரை ஆலைகள் நலிவடைந்த நிலையிலிருந்து மேம்பட்டு வருகின்றன.

**கரும்பு டன்னுக்கு ரூ.3500 வழங்கப்படுகிறது!**

சர்க்கரை ஆலைகளின் கரும்பு பதிவுப் பரப்பு: 2019-2020 வரை கரும்பு சாகுபடி பரப்பு குறைந்து வந்த நிலையில், கழக அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, கரும்பு சாகுபடி பரப்பு 95 ஆயிரம் ஹெக்டேரிலிருந்து 2021-2022 நடவுப் பருவத்தில் 1 இலட்சம் ஹெக்டேராக உயர்ந்தது. 2024-2025 பருவத்தில் அகில இந்திய அளவில் கரும்பு சாகுபடி பரப்பு குறைந்துள்ள நிலையில், தமிழ்நாட்டிலும் பூச்சிநோய் தாக்குதல் உள்ளிட்ட காரணங்களால் கரும்பு சாகுபடி பரப்பு சற்று குறைந்துள்ளது. கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து எடுத்து வருகிறது.

**சர்க்கரைக் கட்டுமானம்:** சர்க்கரை ஆலைகளின் பிழி திறனை அதிகரிக்கும் வகையில், புதிய கரும்பு இரகங்களைக் கண்டறியவும், ஆலையின் இயந்திரங்களை நவீனமயமாக்கவும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**கரும்பு விலை:** கடந்த 2015-2016 பருவம் முதல் 2019-2020 பருவம் வரையிலான ஐந்து ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் கரும்பு விலை உயர்த்தப்படாமல் டன் ஒன்றுக்கு ரூ.2,750/ என்ற ஒரே விலை வழங்கப்பட்டது. இந்நிலையில், கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த நான்காண்டு காலத்தில் கரும்பு விலையை ரூ.2,750/லிருந்து ரூ.750/ உயர்த்தி, 2024-2025 அரவை பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.3,500/ என உயர்த்தி முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

தற்போது அறிவித்துள்ள இந்த சிறப்பு ஊக்கத் தொகையின்மூலம் அதிக சர்க்கரைக் கட்டுமானம் உள்ள, அதாவது 9.85 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை டன் ஒன்றுக்கு ரூ.3,616/ஐ கரும்பு விலையாக வழங்குகிற நல்ல நிலையில் இருக்கிறது. அதேபோன்று, 10.10 சதவிகிதம் கட்டுமானம் உள்ள தர்மபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலை டன் ஒன்றுக்கு ரூ.3,693/ஐ கரும்பு விலையாகவும், 10.65 சதவிகிதம் சர்க்கரைக் கட்டுமானம் உள்ள அரூர் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை டன் ஒன்றுக்கு ரூ.3,881/ஐ கரும்பு விலையாகவும் தற்போது கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பு நிதிநிலை அறிக்கையில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.349/ உயர்த்தி டன் ஒன்றுக்கு கரும்பு விலையாக ரூ.3,500/வழங்குவதற்காக தமிழக முதலமைச்சர் அவர்கள் 297 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கியுள்ளார்கள். இதன்மூலம் சுமார் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் விவசாயிகள் பயன்பெறுவார்கள். கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், சிறப்பு ஊக்கத்தொகையாக 1,145 கோடி ரூபாய் மற்றும் வழங்கப்பட்ட கடனாக 702 கோடி ரூபாய் என சுமார் 1,847 கோடி ரூபாய் முதலமைச்சர் அவர்கள் விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகளுக்கு மானிய விலையில் 128 கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கரும்பு அறுவடை இயந்திரம் ஒன்றுக்கு ரூ.43 இலட்சம் வீதம் மொத்தம் சுமார் ரூ.55 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தானியங்கி எடைமேடைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கரும்பு எடையை துல்லியமாகக் கணக்கிட 15 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ரூபாய் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் மதிப்பீட்டில் தானியங்கி எடைமேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.



நவீன ஆய்வகங்கள். கரும்பு சாறில் உள்ள சர்க்கரையின் அளவை துல்லியமாக கணக்கிட 15 கூட்டுறவு மற்றும் பொது துறை சர்க்கரை ஆலைகளில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் ஆய்வகங்கள் நவீனமயமாக்கப்பட்டுள்ளன.

**கரும்பு அபிவிருத்தி திட்டங்கள்!**

கரும்பு அபிவிருத்தி திட்டங்கள். தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 18 கோடியே 83 இலட்சம் மதிப்பீட்டில் கரும்பு அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 82 இலட்சம் மானியத்தில் கரும்பு அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. நுண்ணீர் பாசனத் திட்டத்தின்மூலம் கரும்பு சாகுபடியில் 12,952 ஹெக்டேர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசனம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**இணை மின் திட்டம்:** அதுவும் கடந்த காலத்தில் கிடப்பில் போடப்பட்ட எம்.ஆர்.கே. மற்றும் தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் பணி முடிக்கப்பட்டு, தற்போது செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எத்தனால் உற்பத்தியைப் பொறுத்தவரை, சர்க்கரை ஆலைகளின் வருவாயைப் பெருக்கிடும் நோக்கில், எம்.ஆர்.கே. மற்றும் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் நாளொன்றுக்கு 60 கிலோ லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட எத்தனால் ஆலை அமைக்க உத்தரவு வழங்கப்பட்டு, அந்தத் திட்டத்திற்கான நிதியைப் பெறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை!**

சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் பெயர் மாற்றம். முதலமைச்சர் அவர்களால் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் பெயரினை மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை என்று பெயர் மாறுதல் செய்து உத்தரவிடப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

புதிய கரும்பு ரகங்களை கண்டறிவதற்கான நடவடிக்கைகள். கரும்பு சாகுபடியை அதிகரிக்கவும், சர்க்கரை ஆலைகளின் சர்க்கரை கட்டுமானத்தை உயர்த்தும் நோக்குடனும் ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற புதிய கரும்பு ரகங்களை கண்டறியும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் கரும்பு இனப்பெருக்க நிறுவனத்துடன் இணைந்து ஆக்கபூர்வமான முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சர்க்கரைத் துறை தொடர்பாக 2021?22 முதல் 2024?25 ஆம் நிதியாண்டு வரை மொத்தம் 30 அறிவிப்புகள் வெளியிடப்பட்டு அதில் 29 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

புதுடெல்லியில் உள்ள தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இணையமானது தமிழ்நாட்டில் உள்ள கீழ்க்கண்ட 5 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை சிறந்த செயல்பாட்டிற்கான விருதுகள் வழங்க தேர்வு செய்துள்ளது. ஒட்டுமொத்த செயல் திறனுக்கான சிறந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கான முதல் பரிசு - அரூர் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கிடைத்திருக்கிறது. சிறந்த நிதி மேலாண்மைக்கான இரண்டாம் பரிசுவிழுப்புரம் செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கிடைத்துள்ளது. சிறந்த தொழில்நுட்ப திறனுக்கான இரண்டாம் பரிசு- செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கிடைத்துள்ளது. சிறந்த கரும்பு அபிவிருத்திக்கான இரண்டாம் பரிசு-கள்ளக்குறிச்சி2 கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கிடைத்துள்ளது. சிறந்த நிதி மேலாண்மைக்கான மூன்றாம் பரிசு-தர்மபுரி பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்குக் கிடைத்துள்ளது.

இவ்வாறு முதலமைச்சர் அவர்கள் கரும்பு விவசாயிகளுக்கு தாயுள்ளதோடு, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் செழித்திட அனைத்து வழிகளிலும் உதவி செய்திடும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர், முருகானந்தம், IAS அவர்களுக்கும், தமிழ்நாடு அரசின் நிதித் துறை முதன்மைச் செயலாளர், உதயச்சந்திரன், முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர்கள் உமாநாத் , சண்முகம் , வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் தட்சிணாமூர்த்தி, முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர் தினேஷ்குமார் , சர்க்கரைத் துறை இயக்குநர் அன்புச்செல்வன் ஆகியோருக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

**அறிவிப்புகள்: சர்க்கரைத் துறை**

புதிய அறிவிப்புகளாக 15 அறிவிப்புகளை வெளியிட இருக்கிறேன்.

1. கரும்பு பிரிதிறனை 90 சதவீதத்திற்கு அதிகரித்திடவும், கரும்புச் சக்கையில் ஏற்படும் சர்க்கரை இழப்பைக் குறைத்து சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகரிக்கவும், கள்ளக்குறிச்சி2 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பழுதடைந்துள்ள இயந்திரத்துக்கு பதிலாக நவீன கரும்பு பிரி திறன் இயந்திரம் மற்றும் மின்மோட்டார்கள் (Swing Type Fibrizor with Motors) ஐந்து கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதியில் நிறுவப்படும்.

2. கரும்பு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், இயந்திர அறுவடையை ஊக்குவிக்கவும் அகலப்பாத்தி முறையில் உயர் விளைச்சல் மற்றும் உயர் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்பு இரகங்களை நடவு செய்யும், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பதிவுசெய்த விவசாயிகளுக்கு பருசீவல் நாற்றுகள், அகலப்பாத்தி நடவு, ஒருபரு விதைக்கரணைகளுக்கு 50 சதவிகித மானியம் வழங்கிட இரண்டு கோடியே 66 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. கரும்பு அரவைத் திறனை அதிகரிக்கவும், ஆலை நேர இழப்பைக் குறைத்து ஆலையின் செயல்திறனை மேம்படுத்திடவும் வேலூர் மற்றும் பெரம்பலூர் சர்க்கரை ஆலைகளுக்கு இரண்டு கோள்கல பல்சக்கரப் பெட்டிகள் (Planetary gear box) இரண்டு கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

4.ஆலையின் செயல் திறன் மற்றும் சர்க்கரைத் தரத்தினை உயர்த்திட கள்ளக்குறிச்சி 1 கள்ளக்குறிச்சி 2 சர்க்கரை ஆலைகளில் தலா 2 படிகலன் பகுதிகள் இரண்டு கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தானியங்கி மயமாக்கப்படும் (Pan automation)

5.சர்க்கரையின் தரம் மற்றும் நிறத்தினை உயர்த்தும் வகையில் வேலூர், சுப்பிரமணிய சிவா, திருப்பத்தூர், மதுராந்தகம், கள்ளக்குறிச்சி 2, எம்.ஆர்.கே. கூட்டுறவு மற்றும் அறிஞர் அண்ணா பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் ஏழு புதிய கரும்பு சாறு சூடேற்றிகள் (Juice heater) இரண்டு கோடியே 35 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்படும்.

6.சீரான தொடர் கரும்பு அரவை நடைபெறவும், நேர இழப்பைக் குறைக்கவும், பெரம்பலூர் சர்க்கரை ஆலையிலுள்ள 18 மெகாவாட் இணை மின் உற்பத்தி நிலையத்திற்கு மேம்படுத்தப்பட்ட புதிய மின்னணு கட்டுப்பாட்டு அமைப்பு (Digital Control System) ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாய் நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

7. கரும்பு அரவைத் திறனை அதிகரிக்கவும், ஆலை நேர இழப்பைக் குறைத்து ஆலையின் செயல்திறனை மேம்படுத்திடவும் வேலூர் மற்றும் எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு மின் மோட்டாரைக் கட்டுப்படுத்தும் 550 கிலோ வாட் திறன் கொண்ட இரண்டு மின்னியல் உபகரணங்கள் (VFD Drive power and control modules) ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதியில் கொள்முதல் செய்யப்படும்.

8 அரவைத் திறன் மற்றும் சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்தும் பொருட்டு செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் பழுதடைந்துள்ள மோட்டாருக்கு பதிலாக அதிகத் திறன் கொண்ட புதிய 1,120 கிலோ வாட் மின் மோட்டார் (Motor) ஒன்று ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

9சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறனை உயர்த்த செங்கல்ராயன், செய்யாறு, கள்ளக்குறிச்சி2, சுப்பிரமணியசிவா மற்றும் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் 6 எண்கள் தொடர் சுழற்சல்லடை (Continuous Centrifugal Machine) ஒரு கோடியே 2 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்கப்படும்.

10.கரும்பு அரவை பாதிப்பு மற்றும் சர்க்கரைக் கட்டமான இழப்பினைத் தவிர்க்கும் பொருட்டு கள்ளக்குறிச்சி2, கள்ளக்குறிச்சி1, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின், கரும்பு அரவைப் பகுதி மோட்டாரினைக் கட்டுப்படுத்த மூன்று புதிய உபகரணங்கள் (Mill DC Drive Unit) 90 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

11.சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகரிக்கவும், ஆலையின் செயல்திறனை மேம்படுத்தவும், வேலூர் மற்றும் எம்.ஆர்.கே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள சுண்டுகலன்களின் (Evaporator) இரண்டு கலண்டிரியாக்கள் (calendrias) 90 இலட்சம் ரூபாய் மாநில நிதியில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும்.

12.சர்க்கரைக் கட்டுமானத்தை உயர்த்த 14 கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு மொத்தம் 20 வெப்ப பரிமாற்ற அலகுகள் (Transient heaters) 50 இலட்சம் ரூபாய் நிதியில் நிறுவப்படும்.

13.சர்க்கரை ஆலைப் பகுதிக்கேற்ற, உயர் விளைச்சல் மற்றும் அதிக சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட புதிய கரும்பு இரகங்களைத் தேர்வு செய்திட, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் மற்றும் முன்னோடி கரும்பு விவசாயிகளின் வயல்களில், தற்போது ஆய்வில் உள்ள கரும்பு இரகங்களை கொண்டு பரிசோதனை வயல்கள் அமைத்திட 28 இலட்சம் ரூபாய் மாநில நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

14.புதியதாக வெளியிடப்பட்ட கரும்பு இரகங்களைப் பிரபலப்படுத்தவும் குறுகிய காலத்தில் விதை உற்பத்தியைப் பெருக்கிடவும் புதிய கரும்பு இரகங்களைக் கொண்டு “மாதிரி வயல்கள்” அமைத்திட 24 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

15.கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்திடவும், தமிழ்நாட்டில் குறைந்து வரும் கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரித்திடவும், உரிய ஆய்வுகள் மேற்கொள்ள வல்லுநர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.இராஜேந்திரன் பதிலுரையில் தெரிவித்தார்.

## கரும்பு சாகுபடிப் பரப்பை அதிகரிக்க நடவடிக்கை!

---

### தமிழ்நாட்டின் கடல்சார் வணிக வரலாற்றுப் பெருமைக்கு அவமானம் இழைக்கும்

# கடலோர கப்பல் போக்குவரத்து மசோதாவில் திருத்தம் செய்திடுவீர்!

## மக்களவையில் – டி.எம்.கதிர்ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஏப். 5 -

தமிழ்நாட்டின் கடல்சார் வணிக வரலாற்றுப் பெருமைக்கு அவமானம் இழைக்கும் கடலோர கப்பல் போக்குவரத்து மசோதாவில் திருத்தம் மேற்கொண்டாக வேண்டும் என்று மக்களவையில் கழக உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் பேசுகையில் வலியுறுத்தினார்.

மக்களவையில் கடலோர கப்பல் போக்குவரத்து மசோதா 2024 மீதான விவாதத்தில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் பேசியதாவது:-

இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்களே இன்று நான் உங்கள் முன் ஒரு மக்கள் பிரதிநிதியாக மட்டுமல்ல கடலோர கப்பல் போக்குவரத்து மசோதா 2024 ஆல் அநீதி இழைக்கப்பட்ட ஒரு மாநிலமான தமிழ்நாட்டின் குரலாகவும் நிற்கிறேன்.

நவீனமயமாக்கல் என்ற போர்வையில் போர்த்தப்பட்ட இந்த சட்டம் நமது கடல்சார் பாரம்பரியத்தை அவமதிப்பதாகவும் நமது பொருளாதார அபிலாஷைகளுக்கு எதிரானதாகவும் நமது கடலோர சமூகங்களின் இதயமாக கருதப்படும் வாழ்வாதாரத்தைக் குறிவைக்கும் ஒரு கூரிய கத்தியாகவும் உள்ளது.

1076 கிலோமீட்டர் கடற்கரை அதன் பரபரப்பான துறைமுகங்கள் மற்றும் அதன் சளைக்காத மக்களைக் கொண்ட தமிழ்நாடு இந்த அரைகுறை மத்திய மையப்படுத்தப்பட்ட கேலிக்கூத்தை கடுமையாக எதிர்க்கிறது.. இம்மசோதாவின் உள்நோக்க முகத்திரையைக் கிழித்து என் தாய்த் தமிழ் நாடு மாநிலத்திற்கு நீதி வழங்கக் கோருகிறேன். முதலில் இந்த மசோதா இந்தியக் கொடியுடன் கூடிய கப்பல்கள் உரிமம் பெறுவதிலிருந்து விலக்கு அளித்தது நமது கடல் வணிகத்தை இலகுவானதாக செய்வதற்காக என்ற உணர்வைத் தரத் துணிகிறது. ஆனால் தமிழ்நாட்டின் அப்பட்டமான யதார்த்தத்தை நீங்கள் புறக்கணித்து விட்டீர்கள். நமது கப்பல் கட்டும் தளங்கள் அவை எப்படி இருக்க முடியும் என்பதற்கான நிழல்கள் நமது துறைமுகங்கள் பல தசாப்தங்களாக புறக்கணிக்கப்பட்ட தால் புலம்புகின்றன மேலும் நமது கப்பல் நிறுவனங்கள் அயல்நாட்டு கப்பல் நிறுவனங்களுடன் போட்டியிட போராடுகின்றன.

குஜராத் அதன் கடல்சார் வலிமையைப் பெருமையாகக் கூறலாம் ஆனால் இந்த நன்மையைக் கோருவதற்கான உள்கட்டமைப்பு இல்லாமல் தமிழ்நாடு தவிக்கிறது. நமது தொலைநோக்குத் தலைவர் நமது தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்த ஒன்றிய அரசின் அக்கறையின்மையைத் தாண்டி ஓங்கி உயர்ந்த வளர்ச்சிக்காக போராடி வருகிறார்.



தூத்துக்குடி துறைமுக விரிவாக்கங்களை விரைவுபடுத்த வலியுறுத்தினார் சென்னைத் துறைமுக ங்களை நவீனமயமாக்கினார். மேலும் நமது மாநிலத்தில் ஒரு கப்பல் கட்டும் மையத்தை உருவாக்கும் இலட்சியத்தை முன்வை த்தார். இதையெல்லாம் ஏற்காமல் இம்மசோதா நமக்கு சில நொறுக்குத் தீனிகளை வழங்குகிறது ஏன்? நாங்கள் நிதி கோருகிறோம் வெற்று வாக்குறுதிகளை அல்ல.

இரண்டாவதாக உள்நாட்டு நீர்வழிகளை கடலோர கப்பல் போக்குவரத்துடன் இணைப்பது பற்றிய மசோதாவின் பிரமாண்டமான பேச்சு கேலிக்குரியதாகும்.

ஒரு காலத்தில் நமது வர்த்தக வலையமைப்பின் இரத்தினமாக விளங்கிய பக்கிங்ஹாம் கால்வாய் ஒன்றிய அரசின் அலட்சியத்தால் பாதிக்கப்பட்டு மூச்சுத் திணறி கைவிடப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அதன் மறுமலர்ச்சியை அயராது ஆதரித்து துறைமுகங்களுடன் இணைக்க நிதி ஒதுக்கீடு செய்து திட்டங்களை வரைந்துள்ளார். ஆனாலும் இந்த மசோதா இதற்குண்டான எந்த ஆதரவையும் உறுதிமொழியையும் வழங்கவில்லை ஒருங்கிணைப்பு பற்றிய தெளிவற்ற வெற்று வார்த்தைகளை மட்டுமே வழங்குகிறது.

மற்ற மாநிலங்கள் விட்டுக்கொடுக்கும் நதிகளுக்காக தமிழ்நாடு ஏன் கையேந்த வேண்டும்? மத்திய அரசு நம்மிடம் இல்லாத நதிகளைப் பற்றி கனவு காணும்போது நாம் ஏன் ஒதுக்கப்பட மாட்டோம். நமது நீர்வழிகளை மீட்டெடுக்க வேண்டும் அல்லது இந்த மசோதா ஒரு போலி என்று ஒப்புக்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக தேசிய கடலோர மற்றும் உள்நாட்டு கப்பல் போக்குவரத்து மூலோபாயத் திட்டம் மாநிலத்தின் சுயாட்சிக்கு முற்றிலும் எதிரானது. ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கும் தமிழ்நாட்டின் தேவைகளை ஒரு அதிகாரியின் குறிப்பேட்டில் எழுத முடியும் என்பது போல மையம் நமது கடல்சார் விதியை ஆணையிடும். நமது சிறு துறைமுகங்கள் சீரமைக்க அகழ்வாரப்பணிகள் தேவை நமது மீன்பிடி துறைமுகங்களுக்கு பாதுகாப்பு தேவை நமது தொழில்களுக்கு இணைப்பு தேவை ஆனாலும் இந்த மசோதா நம்மை ஒரு மையப்படுத்தப்பட்ட வெறும் வார்த்தை ஜாலம் செய்கிறது.

நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியைக் காட்டியுள்ளார் தமிழ்நாடு போன்ற முன் முயற்சிகள் மூலம் கடல்சார் வளர்ச்சியை வளர்ப்பதற்கு கடல்சார் வாரியம் மற்றும் கடலோர பொருளாதார மண்டலங்கள். நமது குரலைப் புறக்கணிக்கும் திட்டத்தால் அவரது முயற்சிகள் ஏன் தடைபட வேண்டும்? இந்த உத்தியின் இணை உரிமையை நாங்கள் கோருகிறோம்.

பேரவைத் தலைவர் அவர்களே! நான்காவதாக இந்த மசோதாவின் சுற்றுச்சூழல் ஆபத்துகள் தமிழ்நாட்டிற்கு ஒரு பயங்கரமான டைம்பாம். நமது மன்னார் வளைகுடா நமது பாக் விரிகுடா வெறும் நீர்நிலைகள் மட்டுமல்ல அவை நமது உயிர்நாடி வேறு எங்கும் காணப்படாத பல்லுயிர் பெருக்கம். இந்த மசோதாவால் தூண்ட ப்பட்ட அதிகரித்த கப்பல் போக்குவரத்து எண்ணெய் கசிவுகள் மாசுபாடு மற்றும் நமது மீனவர்களுக்கு அழிவைத் தருவதாக உள்ளது. இது ஒரு மாபெரும் பிரச்சினை.

எண்ணூர் துறைமுகமருகில் நிகழ்ந்த எண்ணெய்க் கசிவு பேரழிவு இன்னும் நம்மை தொடர்ந்து பாதிக்கிறது எண்ணெய் கறை படிந்த கரைகள் விஷம் கலந்த மீன்கள் உடைந்த வாழ்வாதாரங்கள் ஆனால் ஒன்றிய அரசு சரி செய்ய முடியாமல் தடுமாறுகிறது. நமது சுற்றுச்சூழலை வெகுவாக பாதிக்கும் நிலையில் ரூ.15 லட்சம் அபராதம் விதிக்க மசோதாவில் பரிந்துரை செய்துள்ளது வேடிக்கை இது ஒரு அற்பமான தொகை. நமது தமிழக முதலமைச்சர் உறுதியாக நின்று பசுமையான வளங்களை காக்க திட்டங்களை அமல்படுத்தி சிறப்பு மிகு துறைமுகங்களை உருவாக்க அழுத்தம் கொடுத்துள்ளார். இந்த மசோதா அவரது உறுதியை இரும்புக் கரம் கொண்டு பாதுகாப்புகளுடன் பொருந்த வேண்டும் இல்லையேல் அது நமது கடற்கரைக்கு மரண தண்டனையாக இருக்க நேரிடும்.

இறுதியாக இம்மசோதா நமது சிறிய அளவிலான மீன்பிடி படகு ஆபரேட்டர்கள் மீது தொடரும் தாக்கம் மற்றும் அவமதிப்பு நடவடிக்கை மன்னிக்க முடியாதது. நமது 1.2 மில்லியன் மீனவர்கள் மற்றும் வர்த்தகர்களின் கட்டுமரம் படகுகள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட படகுகளில் தமிழ்நாட்டின் கடல்சார் ஆன்மா துடிக்கிறது அவை நமது முதுகெலும்பு. ஆனாலும் இந்த மசோதா பெரிய கப்பல்களுக்கு உதவிடவே ஆதரவளிக்கிறது இதனால் நமது மீன்பிடி வணிக சிறிய கப்பல்கள் இயக்குபவர்கள் சட்டத்தின் கொடிய சிவப்பு நாடாக்களிலும் அவர்களால் தாங்க முடியாத செலவுகளிலும் மூழ்கடிக் கப்படுவது ஏற்புடையதாக இல்லை.

நமது தமிழக முதலமைச்சர் மானியங்கள் பயிற்சி மற்றும் துறைமுக மேம்பாட்டு முயற்சிகள் மூலம் தமிழ்நாடு மகத்தான மு ன்னேற்றம் அடைந்துள்ளது. இந்த மசோதா தமிழக நலன்களை புறக்கணிக்கிறது. நம்மைத் தாங்கும் மக்களையே ஒன்றிய அரசு சட்டமியற்றி நசுக்க ஒருபோதும் விட மாட்டோம். அவர்களைப் பாதுகாக்கவோ அல்லது எங்கள் கோபத்தை எதிர் கொள்ளவோ இந்த மசோதாவைத் திருத்திட ஆவன செய்ய வேண்டும்

உறுப்பினர்களே தமிழ்நாடு முன்னேற்றத்திற்காக ஒன்றிய அரசிடம் யாசகம் கேட்பதற்கு அல்ல. நமது உரிமையைக் கோரும் ஒரு மாபெரும் தலைவர் பின்னால் நாங்கள் நிற்கிறோம். நமது முதலமைச்சர் நமக்கான வளர்ச்சிப் பாதையை ஒளிரச் செய்துள்ளார். தூத்துக்குடியின் திறனை விரிவுபடுத்தியுள்ளார். நமது துறைமுகங்களை பசுமையாக்கி யுள்ளார் கடல்சார் மறுமலர்ச்சியைக் நனவாக்க அனைத்து வகையிலும் துடிப்புடன் செயலாற்றி வருகிறார் எனவே இப்படிப்பட்ட வெகுஜன நலன் புறக்கணிப்பு ஓரிடம் அதிகாரம் குவிக்கும் ஆணவப் போக்கு சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையற்ற குருட்டுத் தன்மை கொண்ட இம்மசோதா மூலம் தமிழ்நாடு மற்றும் தமிழக மக்களின் வளர்ச்சியை மங்கச் செய்வதைத் தடுத்து நிறுத்தவதே எங்கள் தலையாய கடமையாகும்

ஒன்றிய அரசு நமது துறைமுகங்களுக்கு நிதியளிக்க வேண்டும் நமது நீர்வழிகளை புதுப்பிக்க வேண்டும் நமது சுயாட்சியை மதிக்க வேண்டும் நமது சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் நமது சிறு வணிகர்களை மதிக்க வேண்டும். இந்த பெருமை மிகு சபையில் நான் இதை மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன்.

இம்மசோதாவின் சாரம்சம் தமிழ்நாட்டின் கடல்சார் வணிக வரலாற்று பெருமைக்கு அவமானம் நமது தமிழக முதல்வரின் உழைப்பை சிறுமைப்படுத்தி கேலி செய்வது போலாகும் மற்றும் நமது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் துரோகம் ஆகும்.

இந்த மிரட்டல் உருட்டலுக்கு நாங்கள் தலைவணங்க மாட்டோம். எங்களுக்கு நீதி கொடுங்கள் அல்லது எங்கள் வீர கர்ஜனையை சந்திக்க தயாராகுங்கள்.

இவ்வாறு அவர் உரையாற்றினார்.